# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 238/ந/2024, நாள் 04.08.2025

திரு.V.சரவணக்குமார்,
சின்னவடவள்ளி, கோயம்புத்தூர் மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
மேட்டுப்பாளையம் நகராட்சி, மேட்டுப்பாளையம் – எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், பொகலூர், சின்னவடவள்ளி அஞ்சல், பெரியவடவள்ளி, கதவு எண்.6/46 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.V.சரவணக்குமார் என்பவரின் 28.10.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.11.2024 அன்று பெறப்பட்டு 238/ந/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், பொகலூர், சின்னவடவள்ளி அஞ்சல், பெரியவடவள்ளி, கதவு எண்.6/46 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.V.சரவணக்குமார் என்பவர் தனது 28.10.2024 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

“28.05.2024 அன்று கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட (1) வார்டு 31, சாந்தி நகர், திரு.விஜயகுமார் என்பவர் (2) மேற்படி வார்டு 25, S.குணசேகரன் ஆகிய இருவரும் நகராட்சியில் வழங்கப்பட்ட கட்டிட அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டிடங்கள் கட்டியுள்ளார்கள் என்றும் அதிகளவில் கட்டப்பட்ட இந்த கமர்சியல் கட்டிடங்களுக்கு துறைரீதியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொண்டேன். ஆனால் இதுநாள் வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்படி இக்கட்டிடங்களுக்கு குறைந்தளவே சொத்துவரி விதித்து வருவாய் இழப்பும் ஏற்படுத்தியுள்ளார்கள். இக்கட்டிடங்களில் உள்ள கடைகளுக்கு அதிகளவில் பொதுமக்கள் வந்து செல்லக்கூடிய பகுதியாக உள்ளது. விபத்துக்கள் ஏதாவது ஏற்படுவதற்குள் தாங்கள் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்காத கமிஷனர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் எடுக்கும் நடவடிக்கையின் விபரத்தை எனக்கு தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 12.12.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது.

3. மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண். 6042/2024/எப்1, நாள்.17.04.2025ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

“மனுதாரரின் மனுவிற்கு நகரமைப்பு ஆய்வாளர், வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர்கள் மேற்கண்ட மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டிடத்திற்கு நேரடியாக கள ஆய்வு செய்யப்பட்டு

கீழ்காணும் அறிக்கையினை சமர்ப்பிக்கப்படுகிறது. அனுமதி வழங்கப்பட்ட கட்டிடங்களின் விவரம் கீழ்கண்டவாறு:

1. I) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பாரதி நகர் சாலையில் புல எண்.126, வார்டு B, பிளாக் எண்.38–ல் திரு.விஜயகுமார் என்பவர் குடியிருப்புடன் கூடிய வணிக கட்டிடம் கட்டுவதற்கு க.வி.எண்.24/2022/F1 மற்றும் கட்டிட உரிமம் எண்.074/BL/2022/00038 என்ற எண்ணில் 14.03.2022–ல் அனுமதி பெற்றுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | தரைதளம் | 90.50 ச.மீட்டர் |
| 2. | முதல் தளம் | 90.50 ச.மீட்டர் |

II) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பாரதி நகர் சாலையில் புல எண்.126, வார்டு B, பிளாக் எண்.38–ல் திருமதி.ஜெயசுதா என்பவர் குடியிருப்புடன் கூடிய வணிக கட்டிடம் கட்டுவதற்கு க.வி.எண்.25/2022/F1 மற்றும் கட்டிட உரிமம் எண்.074/BL/2022/00040 என்ற எண்ணில் 14.03.2022–ல் அனுமதி பெற்றுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | தரைதளம் | 90.50 ச.மீட்டர் |
| 2. | முதல் தளம் | 90.50 ச.மீட்டர் |

மேற்படி கட்டிட கள ஆய்வின் போது மேற்கண்ட மனுதாரர்கள் இருவரும் தனித்தனியாக இரண்டு கட்டிட அனுமதிகள் பெற்றுவிட்டு இரண்டையும் ஒன்றாக இணைத்து கீழ்கண்ட அளவுகளில் ஒரே கட்டிடமாக வணிக உபயோக பயன்பாட்டில் லியோ பார் என்ற பெயரில் கட்டிடம் இயங்கி வருகிறது.

2. I) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கிருஷ்ணசாமி நாயுடு சந்து பகுதியில் வார்டு C, பிளாக் எண்.2, புல எண்.99, 100, 102 மற்றும் வார்டு C பிளாக் எண்.23, நகரப்புல எண். 85, 86/1&2, 87, 88, 89, 90, 94, 95 பகுதி 98 பகுதி 10–ல், திரு. குணசேகரன் மற்றும் பலர் வணிக உபயோக கட்டிடம் கட்டுவதற்கு (1) கட்டிட விண்ணப்ப எண்.215/2011, கட்டிட உரிமம் எண்.185/2011, (2) கட்டிட விண்ணப்ப எண்.86/2013, கட்டிட உரிம எண்.92/2013 நாள் 10.05.2013, மற்றும் 2(3) கட்டிட விண்ணப்ப எண்.232/2019, கட்டிட உரிம எண்.074/BL/2019/00114, நாள் 25.10.2019 என்ற எண்களில் தனித்தனியாக மூன்று கட்டிட அனுமதிகள் கீழ்கண்ட அளவுகளில் கட்டிட அனுமதி பெற்றுள்ளார்கள்.

| | |
|---|---|
| 1.தரைகீழ்தளம் | 373.82 ச.மீ. |
| 2.தரைதளம் | 451.29 ச.மீ. |
| 3.முதல் தளம் | 451.29 ச.மீ. |
| 4.இரண்டாம் தளம் | 77.47 ச.மீ. |

மேற்கண்ட அளவுகளில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இட ஆய்வின்போது மனுதாரர் மனை இடத்தில் மூன்று கட்டிடங்களையும் ஒன்றாக இணைத்து வணிக உபயோக கட்டிடமாக கீழ்கண்ட அளவுகளில் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளார்கள்.

| | |
|---|---|
| 1.தரைகீழ்தளம் | 727.14 ச.மீ. |
| 2.தரைதளம் | 727.14 ச.மீ. |
| 3.முதல் தளம் | 727.14 ச.மீ. |
| 4.இரண்டாம் தளம் | 727.14 ச.மீ. |

அனுமதியின்றி மூன்றாம் தளத்தில் 727.14 ச.மீ. பரப்பளவிலும், அதன் மேல் தளத்தில் நான்காம் தளத்தில் 127.12 ச.மீ.பரப்பளவில் Head Room அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மனையிடத்தில் அனுமதிக்கப்பட்ட அளவுகளின்படி பக்க திறவிடங்கள் விடப்படவில்லை. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி கட்டிடத்தின் உயரம் அமைக்கப்படவில்லை என்ற காரணத்தில் மனுதாரர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1971ம் வருடத்திய பிரிவு 56, 57ன் கீழ் கட்டிடத்தினை மூடி முத்திரையிட படிவம் I, II, III மற்றும் IV அறிவிப்புகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சொத்துவரி தொடர்பான விவரங்கள் கீழ்கண்டவாறு:

1. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.31, தெருவின் பெயர் நகராட்சி ஆண்கள் உயர்நிலைப்பள்ளி கதவு எண்.17N1, 17N2, மற்றும் 17N3 ஆகிய முகவரியில் திரு.விஜயகுமார், திருமதி.ஜெயசுதா என்பவரின் கட்டிடத்திற்கு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வரிநிர்ணயம் செய்யப்பட்ட விவரம் பின்வருமாறு:

| வரிவிதிப்பு எண் | பெயர் | கதவு எண் | வரி நிர்ணயம் செய்யப்பட்ட கட்டிடத்தின் அளவு | கட்டிடத்தின் தன்மை தளங்களின் விவரம் | ஆய்வு செய்யப்பட்ட போது கட்டிடத்தின் அளவு | வித்தியாசம் |
|---|---|---|---|---|---|---|
| 074/31/900554 | திரு.விஜயகுமார் திருமதி.R.ஜெயசுதா | 17N1 | 441 | ஆர்சிசி/முதல்தளம் | 441 | 0 |
| 074/31/900555 | | 17N2 | 441 | ஆர்சிசி/முதல் தளம் | 441 | 0 |
| 074/31/900556 | | 17N3 | 2856 | ஆர்சிசி/தரைதளம் | 2856 | 0 |

2. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24, கோவை மெயின் ரோடு, கதவு எண்.35 மற்றும் 44 ஆனது, திரு. எஸ். ஆறுமுகம், எஸ். கிருஷ்ணசாமி, எஸ். குணசேகரன், எஸ். எஸ். சிவசுப்ரமணி என்பவர்களின் பெயரில் சொத்து வரி பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

| வரிவிதிப்பு எண் | பெயர் | கதவு எண் | வரி நிர்ணயம் செய்யப்பட்ட கட்டிடத்தின் அளவு | கட்டிடத்தின் தன்மை | ஆய்வு செய்யப்பட்ட போது கட்டிடத்தின் அளவு | வித்தியாசம் |
|---|---|---|---|---|---|---|
| 074/024/900947 | திரு.எஸ்.ஆறுமுகம் திரு.எஸ்.கிருஷ்ணசாமி திரு.எஸ்.குணசேகரன் | 35 | 16603 ச.அடி | ஆர்சிசி | 16603 ச.அடி | 0 |
| 074/024/900948 | திரு.எஸ்.எஸ்.சிவசுப்ரமணி | 44 | 22980 ச.அடி | ஆர்சிசி | 22980 ச.அடி | 0 |

3. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ முறையீட்டு மனுவினை தொடர்ந்து, மேற்காண் வரி விதிப்பு எண்கள் உள்ள கட்டடத்தை வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர்கள் நேரடி கள ஆய்வு பணி செய்யப்பட்டதில் நிலைக்கட்டிடத்தில் உள்ள அளவிற்கு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு நிலுவையின்றி கேட்பு தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது. அதனால் இந்நகராட்சிக்கு எவ்வித நிதியிழப்பு இல்லை என்ற விவரம் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர், எதிர்மனுதாரரான மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையர் மற்றும் கட்டிட உரிமையாளர்கள் ஆகியோரை 05.05.2025 அன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக விருந்தினர் மாளிகையில் நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.04.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. V. சரவணக்குமார் 05.05.2025 அன்று விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு–31 திரு.விஜயகுமார் மற்றும் வார்டு–25, திரு.S.குணசேகரன் ஆகிய இருவரும் நகராட்சியில் வழங்கப்பட்ட கட்டிட அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டிடங்கள் கட்டியுள்ளனர்.

கட்டிட அனுமதி வழங்கிய பிறகு கட்டிட அனுமதி வழங்கப்பட்டவாறு கட்டிடம் கட்டப்படுகிறதா என்று ஆய்வு செய்யாததால், அனுமதிக்கு மாறாக கூடுதலான அளவில் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. கமர்சியல் அடிப்படையில் செயல்படும் இக்கட்டிடங்களுக்கு நகராட்சி அலுவலர்கள் குறைந்தளவே சொத்துவரி விதித்து வருவாய் இழப்பும் ஏற்படுத்தியுள்ளதால், தாங்கள் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

**6.** மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையர் மற்றும் உதவி நகர்ப்புற திட்டமிடுநர் ஆகிய இருவரும் **05.05.2025** அன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

"மனுதாரர் புகார் குறித்து நேரில் கள ஆய்வு செய்யப்பட்டது. மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பாரதி நகர் சாலையில் புல எண்.126, வார்டு B, பிளாக் எண்.38–ல் திரு.விஜயகுமார் என்பவர் குடியிருப்புடன் கூடிய வணிக கட்டிடம் கட்டுவதற்கு க.வி.எண்.24/2022/F1 மற்றும் கட்டிட உரிமம் எண்.974/BL/2022/00038 என்ற எண்ணில் 14.03.2022–ன் மூலமாக (1)தரைதளம்–90.50 சதுர மீட்டர் மற்றும் (2) முதல் தளம் 90.50 சதுர மீட்டர் அளவிற்கும் மற்றும் திருமதி.ஜெயசுதா என்பவர் குடியிருப்புடன் கூடிய வணிக கட்டிடம் கட்டுவதற்கு க.வி.எண்.25/22/F1 மற்றும் கட்டிட உரிமம் எண்.974/BL/2022/00040 என்ற எண்ணில் 14.03.2022–ன் மூலமாக (1) தரைதளம் 90.50 சதுர மீட்டர் (2) முதல் தளம்–90.50 சதுர மீட்டர் அளவிற்கும் அனுமதி பெற்றுள்ளார்.

கட்டிட கள ஆய்வின்போது மேற்கண்ட மனுதாரர்கள் இருவரும் தனித்தனியாக இரண்டு கட்டிட அனுமதிகள் பெற்றுவிட்டு இரண்டையும் ஒன்றாக இணைத்து கீழ்கண்ட அளவுகளில் ஒரே கட்டிடமாக வணிக உபயோக பயன்பாட்டில் லியோ பார் என்ற பெயரில் கட்டிடம் இயங்கி வருகிறது.

கிருஷ்ணசாமி நாயுடு சந்து பகுதியில் வார்டு C பிளாக் எண்.2, புல எண்.99, 100, 102 மற்றும் வார்டு C பிளாக் எண்.23, நகரபுல எண். 85, 86/1 & 2, 87, 88, 89, 90, 94, 95 பகுதி 98 பகுதி 10–ல் திரு.குணசேகரன் மற்றும் பலர் வணிக உபயோக கட்டிடம் கட்டுவதற்கு (1) கட்டிட விண்ணப்ப எண்.215/2011, கட்டிட உரிம எண்.185/2011, (2) கட்டிட விண்ணப்ப எண்.86/2013, கட்டிட உரிம எண்.92/2013 நாள் 10.05.2013 மற்றும் கட்டிட விண்ணப்ப எண்.232/2019, கட்டிட உரிம எண்.074/BL/2019/00114 நாள் 25.10.2019 என்ற எண்களில் தனித்தனியாக மூன்று கட்டிட அனுமதிகள் கீழ்கண்ட அளவுகளில் கட்டிட அனுமதி பெற்றுள்ளார்கள்.

| | |
|---|---|
| 1. தரைகீழ் தளம் | 373.82 ச.மீ. |
| 2. தரை தளம் | 451.29 ச.மீ. |
| 3. முதல் தளம் | 451.29 ச.மீ. |
| 4. இரண்டாம் தளம் | 77.47 ச.மீ. |

கள ஆய்வின்போது மனுதாரர்கள் மூன்று கட்டிடங்களையும் ஒன்றாக இணைத்து வணிக உபயோக கட்டிடமாக கீழ்கண்ட அளவுகளில் கட்டிடங்கள் கட்டி முடித்துள்ளார்கள்.

| | |
|---|---|
| 1. தரைகீழ் தளம் | 721.14 ச.மீ. |
| 2. தரை தளம் | 721.14 ச.மீ. |
| 3. முதல் தளம் | 721.14 ச.மீ. |
| 4. இரண்டாம் தளம் | 721.14 ச.மீ. |

அனுமதியின்றி மூன்றாம் தளத்தில் 727.14 ச.மீ. பரப்பளவிலும் அதன் மேல் தளத்தில் நான்காம் தளத்தில் 127.12 ச.மீ. பரப்பளவில் Head Room அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், மனையிடத்தில் அனுமதிக்கப்பட்ட அளவுகளின்படி பக்க திறவிடங்கள் விடப்படவில்லை. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி கட்டிடத்தின் உயரம் அமைக்கப்படவில்லை என்ற காரணத்தினால் மனுதாரர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1971ம் வருடத்திய திருத்திய பிரிவு 56, 57ன் கீழ் கட்டிடத்தினை மூடி முத்திரையிட படிவம் I, II, III மற்றும் IV அறிவிப்புகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மனுதாரர் தமிழ்நாடு நகர மற்றும் கிராம திட்டமிடல் சட்டம் 1971ன் கீழ் பிரிவு 80A-ன்படி அரசுக்கு முறையீடு செய்துள்ளார் என கடிதம் மூலம் நகராட்சிக்கு தெரிவித்துள்ளார் என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் முன்பு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் வார்டு எண்.31, தெருவின் பெயர் நகராட்சி ஆண்கள் உயர்நிலைப்பள்ளி கதவு எண்.17N1, 17N2 மற்றும் 17N3 ஆகிய முகவரியில் திரு.விஜயகுமார், திருமதி.ஜெயசுதா என்பவரின் கட்டிடத்திற்கும், வார்டு எண்.24, கோவை மெயின்ரோடு, கதவு எண்கள் 35 மற்றும் 44 ஆனது எஸ்.ஆறுமுகம், எஸ்.கிருஷ்ணசாமி, எஸ்.குணசேகரன், எஸ்.எஸ்.சிவசுப்ரமணி என்பவர்களின் பெயரில் உள்ள

கட்டிடத்திற்கும் சொத்து வரி குறித்து வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர்கள் நேரடி கள ஆய்வு பணி செய்யப்பட்டதில் நிலைக்கட்டிடத்தில் உள்ள அளவிற்கு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு நிலுவையின்றி கேட்பு தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது. இதனால் இந்நகராட்சிக்கு எவ்வித நிதியிழப்பு இல்லை என்ற விவரமும் இதன் மூலம் மாண்புமிகு மறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்கள்.

7. 2–ஆம் எதிர்மனுதாரர்களில் (1) திரு. M C விஜயகுமார், கட்டிட உரிமையாளர் என்பவர் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக விருந்தினர் மாளிகையில் 05.05.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மனுதாரர் புகாராக தெரிவிக்கும் கட்டிடம் முறையான அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளது.

இக்கட்டிடத்தில் வாகன நிறுத்துமிடம் தேவையான அளவு விடப்பட்டுள்ளது.

இக்கட்டிடத்தில் தேவையான அளவுக்கு செட்பேக் உள்ளது என்பதை இம்முறைமன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

8. 2–ஆம் எதிர்மனுதாரர்களில் (2) திரு. S. குணசேகரன் என்பவருக்கு அனுப்பப்பட்ட அழைப்பானை போதுமான முகவரி இல்லை என திரும்பப் பெறப்பட்டதால் மேற்படி எதிர்மனுதாரர் 05.05.2025 அன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை. அவருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுக்கும் விதமாக 26.05.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற உள்ள விசாரணைக்கு ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண்.238/ந/2025, நாள் 13.05.2025–ன் மூலம் அறிவுறுத்தப்பட்டது. அழைப்பாணைகள் மனுதாரருக்கும், மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையருக்கும் அனுப்பப்பட்டன.

9. மேற்படி அழைப்பாணைக்கு மனுதாரர் தனது 21.05.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"கட்டிட அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் திரு.குணசேகரன் என்பவர் கட்டிடம் கட்டியுள்ளார். T.P.O. அவர்கள் ஆய்வு செய்யாததால் விதிகளை மீறி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

வரைபடத்தில் உள்ளவாறு பார்க்கிங் பகுதி விடப்படவில்லை. பக்க திறவிடங்கள் ½ அடி கூட விடப்படவில்லை.

கட்டிடத்தின் ஒரு பகுதி 10000 சதுர அடிக்கு மேல் ஜவுளி கடையாக இயங்கி வருகிறது.

கட்டிடத்தின் இன்னொரு பகுதியில் 36 தங்கும் அறைகள் கொண்ட தங்கும் விடுதியாக செயல்பட்டு கொண்டிருக்கிறது.

இந்த கட்டிடத்திற்கு அவசரகால வழி விடப்படவில்லை.

ஆகவே தாங்கள் உரிய விசாரணை நடத்தி எனது மனு மீது நடவடிக்கை எடுக்காத சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நான் மேலே குறிப்பிட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையே. எனக்கு உடல்நிலை சரியில்லாததால் உரிய விசாரணைக்கு வர இயலவில்லை." என தெரிவித்துள்ளார். அதன்படி மனுதாரரும் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

10. மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையரின் சார்பாக நகராட்சியில் உதவி நகர திட்டமிடுநரும், வருவாய் ஆய்வாளரும் 26.05.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலங்களை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளனர். அதில்–

"மனுதாரர் திரு. S. குணசேகரன் மற்றும் திரு. S. ஆறுமுகம், திரு. S. கிருஷ்ணசாமி, திரு. S. சிவசுப்பிரமணியன் என்பவர்களின் கட்டிடத்தை 17.04.2025 அன்று நகராட்சியின் மூலம் கள ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி கட்டிடத்திற்கு 40488 சதுர அடி அளவிற்கு வரி விதிப்பு செய்யப்பட்டிருந்தது. மேற்படி வரிவிதிப்பில் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதுமில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

மனுதாரர் திரு. S. குணசேகரன் மற்றும் திரு. S. ஆறுமுகம், திரு. S. கிருஷ்ணசாமி, திரு. S. சிவசுப்பிரமணியன் என்பவர்களின் கட்டிடத்திற்கு பிரிவு 56 மற்றும் 57 of Tamil Nadu Town and Country Planning Act,1971–ன் கீழ் முறையே படிவம்–I முதல் V வரையிலான உரிய அறிவிப்புகள் வழங்கப்பட்டு மேற்படி கட்டிடத்தினை மூடி முத்திரையிட தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மனுதாரர் திரு. S. ஆறுமுகம் த/பெ. S. A. சண்முகம், க.எண்.2D, கோ–ஆபரேட்டிவ் காலனி மேட்டுப்பாளையம் என்பவரது கடிதம் தமிழக அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அலுவலத்தில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் 07.02.2025 என குறிப்பிட்டு 21.02.2025 அன்றைய தேதியிட்ட கடிதம் மூலம் நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. கடிதத்தின் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்படி விவரங்கள் அனைத்தும் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்பு பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்ளப்படுகிறது." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11. கட்டிட உரிமையாளர் திரு. S. குணசேகரன் என்பவர் 26.05.2025 அன்றைய விசாரணையில் தன்னால் கலந்து கொள்ள இயலாத காரணத்தால் தனக்கு பதிலாக விசாரணையில் தனது அண்ணன் மகள் திருமதி. Dr. விஜயப்பிரியா, மருமகன் Dr. சிவராஜன் மற்றும் தனது தம்பி மகன் திரு. அரவிந்த் ஆகியோரை கலந்து கொண்டு பதில் அளிக்க தனது 25.05.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் அதிகாரம் அளித்ததன் அடிப்படையில், திரு. அரவிந்த் மற்றும் டாக்டர்.விஜயப்பிரியா இருவரும் 26.05.2025 அன்றைய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளனர். அதில்–

"மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள எங்களது கட்டிடத்திற்கு அரசுக்கு செலுத்த வேண்டிய GST, தொழில் வரி, குடிநீர் மற்றும் நகராட்சி வருவாய் பிரிவினரால் நேரடியாக அளந்து கணக்கீடு செய்யப்பட்டு அவர்களது கணக்கீட்டின்படி 2021ம் ஆண்டு முதல் ஆண்டுக்கு சுமார் ரூ.13,00,000/– லட்சம் (ரூபாய் பதிமூன்று லட்சம் மட்டும்) சொத்து வரி போன்ற அனைத்து வரிகளையும் நகராட்சிக்கு செலுத்தி வருகிறோம்.

மேற்படி எங்களது வணிகபயன்பாட்டு கட்டிடத்தில் 40 கார்கள் நிறுத்தும் அளவிற்கு கார் பார்க்கிங் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் Stability Certificate, Fire License, Trade License பெற்றுள்ளோம்.

மேலும் மேற்படி எங்களது வணிக பயன்பாட்டு கட்டிடம் தொடர்பாக நாங்கள் அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னைக்கு 07.02.2025 அன்று மேல்முறையீடு செய்துள்ளோம் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

எனவே எங்கள் மேல்முறையீட்டு மனுவின் மீது உத்தரவு வழங்கும்வரை மேட்டுப்பாளையம் நகராட்சி நிர்வாகம் வழங்கிய நோட்டீஸ் மீது மேல்நடவடிக்கையை நிறுத்தி வைக்க ஆவன செய்யும்படி இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

12. மேலும் கட்டிட உரிமையாளர் திரு. S. குணசேகரன் என்பவர் சார்பில் 26.05.2025 அன்றைய விசாரணையில் நேரடியாக ஆஜரான திருமதி Dr. A. விஜயப்பிரியா என்பவர் சமர்ப்பித்த 26.05.2025 நாளிட்ட கடிதத்தில் –

"நாங்கள் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் கடந்த 66 வருடங்களுக்கு மேலாக கூட்டு குடும்பமாக இருந்து தொழில் நடத்தி வருகின்றோம். எங்கள் நிறுவனத்தின் மூலம் சுமார் 200 குடும்பங்களுக்கு முழுநேர வேலை வாய்ப்பும், சுமார் 50 குடும்பங்களுக்கு சுய வேலை வாய்ப்பும் வழங்கி வருகின்றோம்.

மேலும், 66 ஆண்டுகளாக அரிமா சங்கம், மனவளக்கலை மன்றம், சுழல் சங்கம் போன்ற சேவை அமைப்புடன் இணைந்து கண் சிகிச்சை முகாம்களையும், பொது நல மருத்துவ முகாம்களையும், எங்கள் பகுதியில் இயங்கி வரும் அரசு பள்ளி குழந்தைகளுக்கு புத்தகங்கள், சீருடைகள், குடிநீர் தேவைக்கு ஆழ்துளை கிணறு போன்ற சேவைகளையும், நலிந்த கோவில் பராமரிப்பு போன்ற தெய்வீக கைங்கரியங்களையும், மேட்டுப்பாளையத்தில் மின் மயானம் அமைவதற்கு பெரும் முயற்சியையும், பொருள்

உதவிகளையும், நந்தவனம் கட்டிடம் கட்டுவதற்கு மிக பெரும் பங்கினையும், அரசு மருத்துவமனைக்கு கட்டில், மெத்தை மற்றும் தேவையான உபகரணங்கள் போன்றவற்றை வழங்குதல் போன்ற சேவைகளை எங்களால் இயன்றளவு ஆற்றி வருகின்றோம்.

மேலும், அரசுக்கு செலுத்த வேண்டிய GST, தொழில் வரி, குடிநீர் வரி மற்றும் நகராட்சி அளவையரால் நேரடி அளவியல் முறையில் கணக்கீடு செய்யப்பட்டு அவர்களது கணக்கீட்டின்படி 2021–ம் ஆண்டு முதல் ஆண்டுக்கு சுமார் ரூ.13,00,000/– அளவில் சொத்துவரி போன்ற அனைத்து வரிகளையும் சரியான காலகட்டத்தில் செலுத்தப்பட்டு வருகின்றது.

மேலும், நாங்கள் நடத்தி வரும் தொழிலானது பொது மக்களாகிய எங்களது வாடிக்கையாளர்களின் முக்கியத்துவத்தை கொண்டிருப்பதால் எங்களது கட்டிடத்தின் நிலைதன்மையை கொண்டு சரியான முறையில் பாதுகாப்பு உறுதி செய்ய கட்டிட வல்லுநர்களிடமிருந்து பெறப்பட்ட கட்டிட உறுதி தன்மை சான்றிதழ் (Building Stability Certificate), அவசர காலத்தில் வெளியேறுவதற்கு அவசரகால வழி (Emergency Exit), தீயணைப்பு துறையினரால் ஆய்வு செய்யப்பட்டு அளிக்கப்பட்ட தீ தடுப்பு பாதுகாப்பு சான்றிதழ் (Fire Safety Certificate), தேவைக்கு அதிகமான அளவில் கார் பார்க்கிங் வசதி மற்றும் யாருக்கும் இடையூறு இல்லாத வகையில் விசாலமான நடைப்பாதை போன்றவற்றை கொண்டுள்ளது.

மேலும், இக்கட்டிடத்தில் உள்ள சிறு சிறு குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டி Revised Drawing-யை அரசு அனுமதிக்கு அனுப்பி உள்ளோம் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும், வாடிக்கையாளர்களின் நம்பகத்தன்மை பெற்று எங்கள் வாழ்வாதாரத்தையும், எங்களை சார்ந்த சமார் 250 குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தி கோயமுத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் நகராட்சியில் அதிக வரி செலுத்தும் கூட்டு நிறுவனமாக எங்கள் நிறுவனம் இருந்து வருகின்ற நிலையில் இதுபோன்ற புகார்கள் மூலம் அலைக்கழிக்கப்படுகின்றோம் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும், இதுபோன்ற புகார்களின் அடிப்படையில் எங்களையும், எங்களை போன்ற சிறு குறு நிறுவனங்களும் அவதிக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

மேட்டுப்பாளையம் நகராட்சியில் தொழில் வளம் பெறுவதற்கும், தொழில் செய்பவர்களுக்கும், தொழில் செய்ய முனைவோர்களுக்கும் தக்க பாதுகாப்பும், ஊக்கமும், ஆக்கமும் அளித்து அரசின் சரியான வழிகாட்டுதல்களை வழங்கிட பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, அவரது வாக்குமூலம், நகராட்சி உதவி நகர்ப்புற திட்டமிடுநரின் வாக்குமூலம், வருவாய் அலுவலரின் வாக்குமூலம், 2 ஆம் எதிர்மனுதாரர்களான கட்டிட உரிமையாளர் திரு.விஜயகுமார் என்பவரின் வாக்குமூலம், மற்றொரு கட்டிட உரிமையாளரின் சார்பில் ஆஜரான Dr.விஜயப்பிரியா மற்றும் சி.அரவிந்த் ஆகியோர்களின் வாக்குமூலம், Dr. விஜயப்பிரியா என்பவர் சமர்ப்பித்த 26.05.2025 நாளிட்ட கடிதம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் மிக கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் நகராட்சியில் **(1)** வார்டு எண்.**31**, சாந்தி நகரில் திரு. விஜயகுமார் என்பவரும், **(2)** வார்டு 25–ல் திரு. S. குணசேகரன் என்பவரும் நகராட்சியால் வழங்கப்பட்ட கட்டிட அனுமதிக்கு மாறாகவும்,, கூடுதலாகவும் கமர்சியல் கட்டிடங்கள் கட்டியுள்ளனர் என்றும், மேற்படி கமர்சியல் கட்டிடங்களுக்கு துறைரீதியான நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சியினரை கேட்டுக்கொண்டும், நடவடிக்கை எடுக்காததால் நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து, அதன் விவரத்தை தனக்குத் தெரிவிக்கும்படி மனுதாரர் தனது புகார் மனுவிலும் வாக்குமூலத்திலும் இம்முறைமன்ற நடுவத்தை கோரியிருப்பது அறிய முடிகிறது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள **(1)** வார்டு எண்.**31**, சாந்தி நகரில் திரு. விஜயகுமார் என்பவர் கட்டியுள்ள கட்டிடம் தொடர்பிலான நேர்வில் மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பாரதி நகர் சாலை, புல எண்.126, வார்டு B, பிளாக் எண்.38–ல் திரு. விஜயகுமார் என்பவர் குடியிருப்புடன் கூடிய வணிக

கட்டிடம் தரை தளம் 90.50 ச.மீ. மற்றும் முதல் தளம் 90.50 ச.மீ.–ல் கட்ட க.வி.எண்.24/2022/F1–ல் கட்டிட உரிமம் 074/BL/2022/00038 என்ற எண்ணில் 14.03.2022–ல் அனுமதி பெற்றுள்ளார் என்பதும், அதே பகுதியில், அதே புல எண், வார்டு, பிளாக் எண்ணில் திருமதி.ஜெயசுதா என்பவர் குடியிருப்புடன் கூடிய வணிக கட்டிடம் தரை தளம் 90.50 ச.மீ. மற்றும் முதல் தளம் 90.50 ச.மீ.–ல் கட்டுவதற்கு க.வி.எண்.25/2022/F1–ல் கட்டிட உரிமம் 074/BL/2022/00040 என்ற எண்ணில் 14.03.2022–ல் கட்டிட அனுமதி பெற்றுள்ளார் என்பதும், மேற்படி கட்டிடம் கள ஆய்வின் கட்டிட அனுமதிக்கு மாறாக இரண்டு கட்டிடங்களையும் ஒன்றாக இணைத்து ஒரே கட்டிடமாக கட்டி லியோ பார் என்ற பெயரில் வணிக உபயோக பயன்பாட்டு கட்டிடமாக இயங்கி வருகிறது என்பது நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி ஆணையர், உதவி நகர்ப்புற திட்டமிடுநர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

2–ஆம் எதிர்மனுதாரரும் கட்டிட உரிமையாளருமான திரு. விஜயகுமார் என்பவர், மனுதாரர் புகாராக தெரிவித்திருக்கும் கட்டிடம் உரியவாறு அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளது என்றும், மேற்படி கட்டிடத்தில் வாகன நிறுத்துமிடம் தேவையான அளவு விடப்பட்டுள்ளது என்றும், இக்கட்டிடத்தில் தேவையான அளவுக்கு செட்பேக் உள்ளது என்றும் தெரிவித்திருப்பது அறிய முடிகிறது.

இந்நிலையில், ஒரே பகுதியில் திரு. விஜயகுமார் மற்றும் திருமதி ஜெயசுதா ஆகியோர் தனித்தனியாக முறையே க.வி.எண்.24/2022/F1–ல் கட்டிட உரிமம் 074/BL/2022/00038 என்ற எண்ணில் 14.03.2022 அன்றும் மற்றும் க.வி.எண்.25/2022/F1–ல் கட்டிட உரிமம் 074/BL/2022/00040 என்ற எண்ணில் 14.03.2022 அன்றும் கட்டிட அனுமதிகள் பெற்று கட்டிடம் கட்டும்போது இவ்விருகட்டிடங்களையும் இணைத்து அனுமதிக்கு மாறாக ஒரே கட்டிடமாக கட்டி அதனை வணிக பயன்பாட்டில் கொண்டு வந்திருப்பது விதிமீறலாகும். எனவே, மேற்படி கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 மற்றும் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971–ல் உள்ள ஷரத்துக்களின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள (2) மேட்டுப்பாளையம் நகராட்சி, வார்டு எண். 25–ல் திரு S. குணசேகரன் என்பவர் கட்டியுள்ள கட்டிடம் தொடர்பிலான நேர்வில், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், கிருஷ்ணசாமி நாயுடு சந்து பகுதியில் வார்டு C பிளாக் எண்.2, புல எண்.99, 100, 102 மற்றும் வார்டு C பிளாக் எண்.23, நகரப்புல எண். 85, 86/1 & 2, 87, 88, 89, 90, 94, 95 பகுதி 98 பகுதி 10–ல் திரு. குணசேகரன் மற்றும் பலர் வணிக உபயோக கட்டிடம் கட்டுவதற்கு (1) கட்டிட விண்ணப்ப எண்.215/2011, கட்டிட உரிம எண்.185/2011, (2) கட்டிட விண்ணப்ப எண்.86/2013, கட்டிட உரிம எண்.92/2013 நாள் 10.05.2013 மற்றும் (3) கட்டிட விண்ணப்ப எண்.232/2019, கட்டிட உரிம எண்.074/BL/2019/00114 நாள் 25.10.2019 என்ற எண்களில் தனித்தனியாக மூன்று கட்டிட அனுமதிகள் பெற்றுவிட்டு கட்டிடம் கட்டும்போது மூன்று கட்டிடங்களையும் ஒன்றாக இணைத்து கட்டியிருப்பதால் அனுமதிக்கப்பட்ட அளவுகளின்படி பக்க திறவிடங்கள் விடமாலும், அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி கட்டிடத்தின் உயரம் அமைக்கப்படவில்லை என்ற காரணத்தால், கட்டிட உரிமையாளர்களுக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 56 மற்றும் 57ன் கீழ் கட்டிடத்தினை மூடி முத்திரையிட படிவம் I முதல் V வரையிலான அறிவிப்புகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதை மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி அலுவலர்களின் வாக்குமூலம் ஆகியவற்றிலிருந்து அறிய முடிகிறது.

இந்நிலையில் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம்,1971, பிரிவு 56, 57ன் கீழ் கட்டிட உரிமையாளருக்கு மேட்டுப்பாளையம் நகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்புகள் தொடர்பாக கட்டிட உரிமையாளர்கள் மேற்படி சட்டம், பிரிவு 80–Aன் கீழ் அரசுக்கு மேல்முறையீடு தாக்கல் செய்து, நிலுவையில் உள்ளதால், மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள திரு.S.குணசேகரன் என்பவரின் கட்டிடம் குறித்தான புகாரினை பரிசீலிப்பதற்கான நிலை எழவில்லை என்பதால் மனுதாரரின் மனுவினை முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 4–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.V.சரவணக்குமார்,
எண்.6/46, பெரிய வடவள்ளி,
சின்னவடவள்ளி, பொகலூர் வழி–641 697.
கோயம்புத்தூர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
மேட்டுப்பாளையம் நகராட்சி,
மேட்டுப்பாளையம்–641 301,
கோயம்புத்தூர் மாவட்டம்.

3. திரு.S.குணசேகரன்,
எண்.26, கிருஷ்ணசாமி சந்து,
காந்திபுரம் தெற்கு தெரு,
மேட்டுப்பாளையம் – 641 301, கோயம்புத்தூர் மாவட்டம்.

4. திரு.M.C.விஜயகுமார்,
Site No.30, Part. பாரதி நகர்,
மேட்டுப்பாளையம்–641 301.
கோயம்புத்தூர் மாவட்டம்.

5. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028.

6. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்:
மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற
நடுவரின் தனிச்செயலர்

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர்
சென்னை–600 032